102—

தரம் உயர்த்துதல்

***7293—திருமதி ம. சக்தி:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, காரைமேடு ஊராட்சியிலுள்ள அரசு ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்"

என்ற குறளுக்கேற்ப வாழ்ந்து வருபவரும், மக்களால் நான், மக்களுக்காகவே நான் என்று, (மேசையைத் தட்டும் ஒலி) மக்களின் நல்வாழ்வுக்காக தன்னையே அர்ப்பணித்துக்கொண்டு, நாடே போற்றும்படி நல்லாட்சி நடத்திவரும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், சீர்காழி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட காரைமேடு ஊராட்சியில் இயங்கிவரும் காரைமேடு உயர்நிலைப் பள்ளி, ஆதி திராவிட மக்களின் காவல் தெய்வமாக இருக்கும், கேட்டதையெல்லாம் கொடுக்கும் வள்ளல், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவினைப் பெற்று, மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி அவர்கள்.*

திருமதி ம. சந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்யோசனை, தெளிவு, பெருமுயற்சி, கடும் உழைப்பு, செயலாக்கம், துணிவு, கனிவு, பரோபகாரம், கண்டிப்பு, சொல்லாற்றல், காந்தியம் போன்ற சீரிய குணங்களுடன் எங்களையெல்லாம் வழிநடத்தி, 'அம்மா என்றால் வெற்றி, வெற்றி என்றால் அம்மா' என்று நிரூபித்து வருகின்ற (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா நீங்கள், வில்லாளி இந்திரஜித், வீர அபிமன்யு, கிரேக்க மாவீரன் அலெக்சாண்டர், ஒப்பற்ற கலைப் பொக்கிஷக்கனியினி மும்தாஜ், வீரத்தாய் ஜான்சிராணி, விடிவெள்ளி விவேகானந்தர், தனிப்பெருங்கருணை வள்ளலார், எட்டயபுரத்து முண்டாசு பாரதி, கணிதமேதை இராமானுஜம், வைணவச் செல்வர் சுவாமி சகஜானந்தா. இவர்களின் வரிசையிலே, புறக்குலத்தாரின் கலங்கரைவிளக்கமாக, சமூக, சமய மறுமலர்ச்சியின் சிற்பியாக வாழ்நாள் முழுவதும் எல்லாம் வல்ல செயல்களையும் சிந்தித்து செயலாற்றிவரும் எங்கள் குல தெய்வமே, அம்மா நீங்கள் உயர்ந்த நோக்கு, சிறந்த சேவை, இவ்வழியிலே தாழ்த்தப்பட்ட ஏழைகளுக்கு அன்னையாக விளங்குகிறீர்கள்.

சீர்காழி தொகுதி, கரைமேடு ஊராட்சியில் உள்ள அரசினர் ஆதி திராவிடர் நலப் பள்ளியை 2006 ஆம் ஆண்டு உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தந்த மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இன்று மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தி கிராமப்புற மாணவர்களின் வாழ்வில் கல்வி எனும் விளக்கேற்றி வைத்திருக்கின்றார். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா, நீங்கள், பல்லாண்டு, பல்லாண்டு, பல்லாயிரத்தாண்டு, பலகோடி நூறாயிரம் ஆண்டு ஆரோக்கியமாகவும், ஆனந்தமாகவும் நலமுடன் வாழ (மேசையைத் தட்டும் ஒலி) எல்லாம் வல்ல ஸ்ரீ கண்ண பெருமானை பிரார்த்தனை செய்து, தமிழ்நாட்டினுடைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய புனித பொற்பாதங்களை வணங்கி, கோடானுகோடி நன்றிகளைக் காணிக்கையாக்கி, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைச் சொல்லி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 323, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.